# ‘கோவிட்-19’ நோய்த்தொற்று மற்றும் வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - சிறு வர்த்தகங்கள்

## ஆபத்துகளை மதிப்பீடு செய்து கட்டுப்படுத்துதல்

நாம் வாழும் விதத்தையும் வேலை செய்யும் விதத்தையும் ‘கோவிட்-19’ மாற்றிவிட்டது. ஆனாலும் சிறு வர்த்தக உலகம் தொடர்ந்து இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது.

உங்களுக்கும், உங்களுடைய பணியாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அடையாளம் கண்டு கட்டுப்படுத்த சிறு வர்த்தகங்களுக்கான ஒரு முக்கியமான நடவடிக்கையே வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த ஆபத்து மதிப்பீடாகும்.

ஆபத்து மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும்போது, உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகளாவன:

- இருக்கும் அபாயங்கள் யாவை?
- இது எப்படிப்பட்ட தீங்கினை ஒருவருக்கு ஏற்படுத்தக்கூடும், மற்றும் இதற்கான சாத்தியக்கூறு எவ்வளவு?
- ஆபத்தின் அளவு-நிலை எவ்வளவு?
- இந்த ஆபத்துகளைக் கட்டுப்படுத்த என்னால் என்ன செய்ய இயலும்?
- கட்டுப்பாடு நடவடிக்கைகள் செயலூக்கமாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்தவும், புதிய அபாயங்கள் இருக்கின்றனவா என்று சோதிக்கவும், ஆபத்துகளை எவ்வாறு மீள்பார்வை செய்து கண்காணிக்க வேண்டும்?

ஆபத்துக் கட்டுப்பாட்டு நிர்வாகம் என்பது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் ஒரு செயற்பாடாகும் - வாடிக்கையாளர்களது முரட்டுத்தனமான நடத்தை, அதியளவு வேலைத்தல எதிர்பார்ப்பு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் வேலை செய்தல் போன்றவற்றால்

‘கோவிட்-19’ நோய்த்தொற்றின் காரணமாக ஏற்படும் புதிய அல்லது மாற்றம் அடைந்துள்ள ஆபத்துகள் எதனையும் நீங்கள் மதிப்பீடு செய்வதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்களுடைய தொழிலாளார்களுடன் நீங்கள் இதைப் பற்றிக் கட்டாயமாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும். நீங்கள் இருவரும் இணைவாகச் செயலாற்றி ஆபத்துகளை அடையாளம் கண்டு அவற்றை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதற்கான வழி-வகைகளைக் காணவேண்டும்.

சிறு வர்த்தக உலகத்தினை நாம் அனைவரும் ஒத்துழைப்பாக இருந்து தொடர்ந்து இயக்கிக்கொண்டிருப்போமாக. மேலதிகத் தகவல்களுக்கு safeworkaustralia.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

## உடல்ரீதி விலகல்

மற்றவர்களோடு நெருக்கமான சூழலில் இருந்து வேலை செய்யும்போது, ‘கோவிட்-19’ நோய்த்தொற்றினை எதிர்கொள்வதற்கான ஆபத்து அதிகரிக்கிறது. இயலுமான தருணங்களில் உடல்ரீதி விலகலைக் கடைப்பிடியுங்கள்.

பின் வருவனவற்றைக் கருத்தில் கொள்ளுங்கள்:

- வேலைத்தலத்தின் ‘திட்ட-வரைவு’ (layout) முறையை மாற்றியமைத்தல்.
- நேருக்கு-நேர் ரீதியில் இல்லாத சந்திப்புக்கூட்டங்களை நடத்துதல்.
- அனைவருக்கும் பொதுவான பகுதிகளில் இருக்கும் ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- வாடிக்கையாளர்களை வரிசையில் நிற்குமாறு செய்து அவர்களுடைய எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்.

இயலுமான தருணங்களில், உடல்ரீதித் தொடர்புகள் ஏற்படுவதை மட்டுப்படுத்தும் வகையில் சந்திப்புவேளைகளுக்கு இடையே சிறிது நேர இடைவெளி விடுங்கள், மற்றும் தொழிலாளர்கள் அவர்களுடைய சொந்தக் கருவிகள் மற்றும் உபகரணங்களை வைத்திருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

‘கோவிட்-19’ நோய்த்தொற்றைப் பற்றிய குறிப்பிட்ட தொழில்களுக்கான வழிகாட்டல்களைத் தெரிந்துகொள்ள safeworkaustralia.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

## உங்களுடைய வேலைத்தலத்தினைச் சுத்திகரிப்பு செய்தல்

நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள ஒரு நபர் இருமும்போது அல்லது தும்மும்போது சிதறும் திரவத் துகள்களின் மூலமாக ‘கோவிட்-19’ நோய்த்தொற்று பரவுகிறது.

கிருமிகள் படிந்துள்ள ஒரு பரப்பினைத் தொடுவதனால் ஒருவருக்கு ‘கோவிட்-19’ நோய்த்தொற்று ஏற்படக்கூடும்.

உங்களுடைய வேலைத்தலமானது குறைந்தபட்சமாகத் தினமும் சோப்புத்தூள் மற்றும் தண்ணீரைப் பயன்படுத்திக் கழுவப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

ஒரு பரப்பினை சுத்தம் செய்த பிறகு, நீங்கள் அதைக் கிருமிநீக்கம் செய்யலாம்.

அடிக்கடிக் கை படும் பகுதிகளைச் சுத்தம் செய்வதற்கு முந்துரிமை கொடுங்கள்.

உங்களுடைய வேலைத்தலத்தில் ‘கோவிட்-19’ நோய்த்தொற்று உள்ள ஒருவர் இருந்தால், ஆட்கள் மீண்டும் திரும்பி வருவதற்கு முன்பாக உங்களுடைய வேலைத்தலம் முற்றிலுமாக சுத்தம் செய்யப்பட்டுக் கிருமி நீக்கம் செய்யப்படவேண்டும்.

‘கோவிட்-19’ நோய்த்தொற்றைப் பற்றிய குறிப்பிட்ட தொழில்களுக்கான வழிகாட்டல்களைத் தெரிந்துகொள்ள safeworkaustralia.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

## ‘சேஃப் வொர்க் ஆஸ்திரேலியா’-வின் ‘கோவிட்-19’ வலைத்தலம்

வேலைச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த கடமைகளை சிறு வர்த்தகங்கள் விளங்கிக்கொள்ளவும், ‘கோவிட்-19’ நோய்த்தொற்றின் காரணமாக எழும் ஆபத்துகளைக் கட்டுப்படுத்தவும் சிறு வர்த்தகங்களுக்கு உதவுவதற்காக ‘சேஃப் வொர்க் ஆஸ்திரேலியா’ புதிய வழிகாட்டல்களை உருவாக்கியுள்ளது.

ஆபத்து மதிப்பீடுகளைச் செய்யும் விதம், உடல்ரீதி விலகல், சுகாதாரப் பழக்கங்கள், சரீரப் பாதுகாப்பு உபகரணங்கள், மன நலம், மற்றும் சுத்திகரிப்பு போன்ற தலைப்புகளைப் பற்றிய தகவல்களை safeworkaustralia.gov.au எனும் வலைத்தலம் கொண்டுள்ளது.

உங்களுடைய சிறு வர்த்தகம் மற்றும் தொழிலுக்கு உரிய தகவல்களையும், வேலைத்தலங்களுக்கான ‘சரிபார்ப்பு-அட்டவணைகள்’ (checklists) மற்றும் சுவரொட்டிகள் போன்ற நடைமுறையில் தேவைப்படும் மூலவளங்களையும் எளிதில் கண்டறிய ‘உள்ளடக்க வடிகட்டி’ (content filtering) எனும் வலைக்கருவியைப் பயன்படுத்துங்கள்.

‘கோவிட்-19’ நோய்த்தொற்றைப் பற்றிய குறிப்பிட்ட தொழில்களுக்கான வழிகாட்டல்களைத் தெரிந்துகொள்ள safeworkaustralia.gov.au எனும் வலைத்தலத்திற்கு இப்போதே செல்லுங்கள்.